## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 377/2016

இன்று 2025 ம் ஆண்டு ஜுலை திங்கள் 01ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜோயல் ரிச்சர்டு | தொழில் | : ஓட்டுனர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : லீனஸ் | கிராமம் | : திருப்பூர் |
| வயது | : 50 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 01-07-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. தாவாவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 முதல் 9 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்களில் கண்டுள்ள நபர்கள் தான் தாவாச் சொத்தின் உரிமையாளர்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்கள் திம்மபோயன் வகையறாக்களால் எழுதப்பட்டவை என்றால் சரிதான். அவர்கள் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.4 முதல் 9 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்களின்படி தான் பிரதிவாதிகளுக்கு கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எந்த வகையில் பிரதிவாதிகளின் சொத்தல்ல என்று கூறியுள்ளேனா என்றால் கூறி உள்ளேன். 9ம் பிரதிவாதிக்கு 5.65 ஏக்கரில் 1.99 ஏக்கர் பாத்தியம் என்று சொல்லி உள்ளேன் என்றால் அது தவறு. அவருக்கு 23 செண்ட் பாத்தியம் என்றால் தவறு.

3. பிரதிவாதிகளின் கிரயம் செல்லாது என வேறு எந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவாச் சொத்தில் உரிமை மூல ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. என் சங்கத்தை சேர்ந்தவர்கள் எதிரிடை பாத்தியம் கோரி பல வழக்குகள் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.